அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 40/88

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
1988, நவம்பர் 15 ஆம் திகதி.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

அரசாங்கச் சேவையில் மீளமைக்கப்பட்ட பொழுது படிகள்.

அரசாங்க சேவையில் 1988.01.01ஆம் திகதிக்கு பின்னர் மீளமைக்கப்பட்டவருடைய படி பின்வருமாறுக வேண்டும்:-

(1) பிணவுடனும், பிணவில்லாமலும் மீள அரசாங்கச் சேவையில் அமர்த்தப்பட்ட ஒருவருக்கு அவர் அரசாங்க சேவையில் கடைசியாக பெற்ற சம்பளத்தை, அவர் மீளமர்த்தப்படும் பொழுது வழங்கும் சம்பளத் திட்டத்தில் பொருத்தமான சம்பளப் படிக்கு மாற்று முறை செய்து கொடுக்க வேண்டும்.

(11) மீளமைக்கப்பட்ட ஒருவர் மீண்டும் ஒரு வருட காலத்திற்கு மீளமைக்கப்படும் பொழுது, அவ்வாறு மீளமைக்கப்படும் ஒவ்வொரு வருடங்களுக்கும் அவர் சேவையில் இருந்தாரானல் பொருந்திய சம்பளத் திட்டத்தின் கீழ் அவருக்கு வழங்கக் கூடிய ஒரு சம்பள ஏற்றத்தின் பெறுமதியை சென்ற வருடச் சம்பளத்துடன் சேர்த்துக் கொடுக்க வேண்டும்.

(111) மேற்கூறியவாறு சம்பளம் தீர்மானம் செய்ய முடியாத சந்தர்ப்பத்தில் மீளச் சேவையில் அமைக்கும் பொருட்டு அமைச்சரவைக்கு அனுப்பும் விஞ்ஞாபனத்தில் படியை உள்ளடக்குமுன் தாபனச் செயலாளரை கலந்தாலோசனை செய்தல் வேண்டும்.

02. அரசாங்கச் சேவையில் மீளமைக்கப்பட்ட சகல தர உத்தியோகத்தர்களுக்கும் இந்நிதிகள் உரித்துடையதாகும்.

ஒப்பம்: டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.